ஆசிரியர் மற்றும்
வெளியிடுபவர் :
**வி. யுவராஜ்**

ஆசிரியர் குழு :
**செ.மு. கோபாலகிருஷ்ணன்**
**வி. சேகர்**
**ந. விவேகராகவன்**
**பேரா. முத்துசாமி**

அலுவலகம் :
**வி. யுவராஜ்**
யாதவர் பாசறை
7, பார்த்தசாரதி சுவாமி தெரு
திருவல்லிக்கேணி,
சென்னை - 600 005.
தொலைபேசி : 9840161517

சந்தா விபரம் :
ஆயுள் சந்தா : ரூ.500/-
ஆண்டு சந்தா ரூ.100/-



அன்பு யாதவ சகோதர
சகோதரிகளே,

உங்கள் அனைவரையும் இந்த மாத இதழ் மூலம் சந்திப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். யாதவ மக்களுக்கு சேவை செய்வதற்காக 11 வருடங்களுக்கு முன்பு சென்னையில் ஆரம்பிக்கப்பட்டது யாதவா சோஷியல் அசோசியேஷன். சேவைகள் சென்னையில் தொடங்கி, இன்று தென்தமிழ்நாட்டிலுள்ள திருநெல்வேலி வரை எங்களது சேவை தொடர்கிறது. இலவச திருமணத் தகவல் மையம் எனத் தொடங்கி, இன்று விளையாட்டு விழா, இலவச திருமணங்கள், வேலை வாய்ப்பு, உயர் கல்வி விழிப்புணர்வு, இலவச கணினி பயிற்சி மையங்கள், மாணவர்களுக்கு திறன் வளர்க்கும் போட்டிகள், யாதவ வணிகர் பொருட்காட்சி விழா என்று ஒரு குடும்பத்தில் உள்ள அனைவரும் பயன்பெறும் வகையில் பல்வேறு சேவைகள் செய்து வருகிறோம். ஏற்கனவே கூறியது போல் சென்னையில் ஆரம்பித்த எங்கள் சேவைகள் இன்று மற்ற மாவட்டங்களுக்கும் சென்றடைகிறது. அதிலும் குறிப்பாக விழிப்புணர்வு இல்லாத, கல்வி வளர்ச்சி அதிகம் இல்லாத கிராமங்களை தேர்வு செய்து எங்களது சேவைகளை செய்து வருகிறோம். இந்த தருணத்தில் எங்களுக்கு பொருளதார ரீதியாக உதவி செய்த நல்ல உள்ளங்களுக்கும், சேவைகள் புரிந்திட உதவிய அந்தந்த ஊரைச் சேர்ந்த ஒருங்கிணைப்பாளர்களுக்கும் எங்களது நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

எங்களது சேவை இன்னும் அதிக யாதவர்களை சென்றடையவும், உயர் கல்வி, வேலைவாய்ப்பு, வணிகம் பற்றிய விழிப்புணர்வு நமது யாதவர்கள் பெறவும், நாங்கள் 'யாதவர் பாசறை' மாத இதழ் தொடங்கியுள்ளோம். ஒரு குடும்பத்தில் உள்ள அனைவரும் படித்து பயன்பெறும் வகையில் 'யாதவர் பாசறை' மாத இதழை வெளியிட முற்பட்டுள்ளோம். எங்களுடைய இந்த முயற்சியில் உங்கள் மேலான கருத்துக்களையும், ஆதரவினையும் எதிர்பார்க்கிறோம்.

உங்கள் சகோதரன்,

**வி. யுவராஜ்**
ஆசிரியர்

KSK Laser/ID/July10/Gen-bookt/2

AEPL

# AMBLY ENGINEERING PRIVATE LIMITED

1, Madurai Veeran Koil Street,T. Nagar, Chennai - 600 017.
**Phone : 24363435, 24363132 www.amblyengineering.com**



Industrial Structures



Heavy Equipment Erection



Industrial Piping



Ship Building

*With best compliments from :*

**P. MUTHUKUMARASAMY,** B.E., M.B.A.,

**G.K.KANNAN,** B.E,
9380410248

# ARCH ALUM FABS

***Aluminium Cladding * Structural Glazings**
***Doors* Windows* Partitions* Ventilators**
***False Ceiling**

**Plot No.20, Arignar Anna Industrial Estate,**
**Mettukuppam, Ph: 6562 3307, 65623308, 24761830**
**E-mail: gkkannan@archalumfabs.com**
**Vanagaram, Chennai – 600 095.**
**(Opp.Porur Gardens Phase I)**



**K. CHENTHAMARAI,** I.P.S. (Retd.)
Former IG of Police, Tamilnadu

## MESSAGE

A few young men led by Sri V. Yuvaraj were deeply disturbed by the low economic and social status of their community. They resolved to do their best to help improve the lives of community members. The result was the birth of the Yadava Social Association (YSA).

Initially, they used this organization to hold events designed to encourage and educate children. They conducted competitions and awarded prizes for essay writing, public speaking, recitation of Thiruppavai, etc. These children-oriented activities attracted many parents and the Association grew in strength. Next, the Association donated computers in villages to instill computer literacy and explained its importance to students in schools and colleges.

The Association organized marriage melas, wherein videos were used to present details about would-be brides and bridegrooms. These melas proved to be very successful and attracted large crowds. These gatherings were used to provide a forum for politicians to address the community and promote the theme of “strength in unity”.

Encouraged by the response to their efforts, they organized industrial exhibitions, where members of the community who had small scale industries exhibited their wares. These events not only helped businessmen to network, but also served to showcase the success of the community and encouraged budding entrepreneurs to pursue their dreams. Speakers at these events explained and provided details about employment and educational opportunities. Stressing the need for self-help, they organized self-help groups and arranged for financing from banks. The Association conducted these exhibitions in all parts of the state.

In sum, the Association has an admirable record of organizing many events which effectively address the educational, social and economic needs of community members. By promoting self-reliance, the Association fosters the best hope for the future of the community.

The young men and women of the Association have enthusiastically contributed their funds and efforts in addition to sacrificing valuable time with their family members. Their activities need to be encouraged and expanded so that they can have a wider reach in the community. Such an expansion is possible only through generous financial help from philanthropic members in the community. I pray for Divine blessings and guidance so that these noble and sincere efforts bear fruit and ensure a bright future for all community members.

Sincerely yours,
**K. Chenthamarai**

*With best compliments from*

# R.M. ASSOCIATES

No.5, 4th Street, Dr. Radhakrishnan Salai,
Mylapore, Chennai - 600 004.
Ph : 28474423, 28475173 & 28472244, Fax : 28474741
E-mail : ranganathan@bsnl.in

**RANGANATHAN** - Managing Partner

Authorised Wholesale Dealer for :
**Exide Tubular / Powersafe Maintenance Free Batteries and Exide Automotive Batteries for UPS, EPABX, Invertors, Emergency Lamps**

B.O. : 194, T.H. Road, Tondiarpet, Chennai - 600 081. Phone : 25954094

*We undertake Annual Maintenance Contract for all kinds of Batteries*

Work in Divine

## D. Shanmugam

# SANTHOSH FURNITURE

INTERIOR DESIGNERS & DECORATORS

**BANK OF BARODA**
**PANEL INTERIOR DECORATOR**

***All kinds of High Class Quality in House, Office & Computer Furnitures***

***★ Wooden Partition & Furniture ★ Aluminium Fabrication***
***★ Heritage Surface Texture ★ False Ceiling (Any Kind)***
***★ Home, Office and Computer Furnitures***

No.69, Jawaharlal Nehru Salai, (100 Feet Road), Vadapalani,
Chennai - 600 026. ✆ : 24848417, 42136824, Mobile : 9380448417

# தென்பழஞ்சியில் கணினி மையம்

யாதவா சோஷியல் அசோசியேஷன், சென்னை, "**மாதம் ஒரு சேவை**" திட்டத்தின் கீழ் மதுரைக்கு 20 கிமீ. தொலைவில் உள்ள தென்பழஞ்சி என்னும் கிராமத்தில் மே மாதம் 9ம் தேதி (9-5-2010) அன்று இலவச கணினி பயிற்சி மையம் தொடங்கி வைத்தது. இக்கிராமத்தை சேர்ந்த துடிப்பு மிக்க இளைஞர்கள், மிட்டாய் கண்ணன் மற்றும் மெய்யாதவ் அவர்களின் வேண்டுக்கோளுக்கிணங்க சங்கத்தின் தலைவர் திரு. வி. யுவராஜ் அவர்கள் இலவச கணினி பயிற்சி மையத்தை இக்கிராமத்தில் தொடங்கி வைத்தார். மிகச் சிறிய கிராமமாக இருந்தாலும் கூட, 200க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர், பெற்றோர்கள் ஊர் பெரியவர்கள் கலந்து கொண்டனர். விழாவில் கிராமத் தலைவர் திரு. பெரிய கருப்பக் கோனார் வரவேற்று பேசினார். பின்னர் தொழிலதிபர் கருப்பையா மற்றும் நாகேந்திரகண்ணன் அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றினார்கள். தலைவர் திரு. வி. யுவராஜ் அவர்கள் பேசுகையில் வருங்காலத்தில் கணினியின் முக்கியத்துவத்தை பற்றி எடுத்துரைத்தார். இத்தனை சிறிய கிராமமாக இருந்தபோதிலும் குடும்பத்தில் உள்ள அனைவரும் பங்கு பெற்றதை மனதார பாராட்டி பேசினார். மேலும் அவர் பேசுகையில் விழிப்புணர்வு இல்லாத இக்கிராமத்தில் பிறந்து வளர்ந்து சென்னையிலே தலைசிறந்து விளங்கும் ஐ.ஐ.டி.யில் படிக்கும் திரு. பால்முருகனின் தந்தையை மேடைக்கு அழைத்து கௌரவித்தார். மிக அதிக அளவில் மாணவர்கள் கலந்து கொண்டதை கண்டு மகிழ்ச்சியுற்ற தலைவர் திரு. வி. யுவராஜ் அவர்கள், தேவைப்பட்டால் மற்றும் ஒரு கணினி வாங்கி தருவதாக கூறினார். இந்த கணினி பயிற்சி மையத்தில் யாதவ மாணவர்களுக்கு இலவசமாக கணினி கற்றுத்தர முன்வந்த தென்பழஞ்சியில் கணினியில் தேர்ச்சி பெற்ற இளைஞர்களான திரு. வைரமுத்து, திரு. முருகன் திரு. சிவா, திரு. ஆனந்த் அவர்களை கூட்டத்தில் அறிமுகப்படுத்தி பாராட்டி பேசினார்.

இத்தகைய மிகச் சிறப்பான விழாவினை ஏற்பாடு செய்திருந்த தென்பழஞ்சி இளைஞர்களை குறிப்பாக திரு. மெய்யாதவ். திரு. மிட்டாய் கண்ணன், திரு. செந்தில் குமார் அவர்களை உளமார வாழ்த்தி பேசினார்.

விழாவில் திரு. இராமானுஜம், திரு. வினோத் குமார், தமிழ்நாடு சமாஜ்வாடி கட்சித் தலைவர் திரு. ஜெபராஜ் மற்றும் வளர்ந்து வரும் நடிகர் திரு. இராமமூர்த்தி அவர்கள் கலந்து கொண்டனர். இத்தகைய சேவை திட்டங்களை தங்கள் கிராமத்தில் / ஊரில் செய்ய வேண்டி விரும்புபவர்கள், தலைவர் திரு. வி. யுவராஜ் அவர்களை தொடர்பு கொள்ளவும். தொ.பே. 98401 61517



மிக்ஸி, கிரைண்டர் போன்ற சாதனங்களின் ஜாயின்ட்களை சுத்தம் செய்ய டூத் பிரஷ்கள் உகந்தவை. மிக்ஸி ஜாரின் மூடியிலுள்ள ரப்பர் பள்ளம், கிரைண்டர் டிரம்மைப் பொருத்தும் ரப்பர் பள்ளம, போன்றவற்றில் அரிசி-யோ, பருப்போ விழுந்து விட்டால் லேசாக சாய்த்துப் பிடித்துக் கொண்டு பிரஷ்ஷால் தட்டிவிட நொடியில் கிளீன்.



பீட்ரூட், உருளை, இஞ்சி போன்றவற்றின் மேல், குறிப்பாக குழிவான பகுதிகளில், மண் ஒட்டிக் கொண்டு இருக்கும். அவற்றை நகங்களை அழுக்காக்கி கொள்ளாமல் டூத் பிரஷ்ஷால் தேய்த்துக் கழுவலாம். பளிச்சென்று இருக்கும்.

*With best compliments from*

**N. SRINIVASAN**
Managing Partner

# M.V.P. NATESA MUDALIAR & SONS
# M.V.P.N.K. ENTERPRISES

DISTRIBUTORS : XETEX - NONWOVEN INTERLINING
STOCKIST OF : MADURA COATS &
STOCKIST OF ALL GARMENT ACCESSORIES

**New No.5, Old No.4, Bangaru Street, Ellis Road,**
**Mount Road, Chennai - 600 002.**
Phone : 044-2858 4077, Mobile : 98417 22419, Telefax : 044-2851 0748

*With best compliments from*

# S.M. INTERIORS

(INTERIOR CONTRACTORS)
Suppliers of : All types of False Ceiling and Partition Materials,
Fibre Glass wool, False Flooring & All Accessories

★ GYB Board False Ceiling ★ GYB Board Partition ★ Cornics
Mouldings ★ Armstong Grid Ceiling ★ Plaster of Paris
★ Painting Works ★ Aerocon Partition ★ Vinayal Floorings
★ Aluminium Partition & ACP Work Etc

New No.5A, Main Street, P.P. Garden, Aminjikarai,
Chennai - 600 029. Tel : 044-26208993, 43532451
Cell : 9444062351
E-mail : sminteriorslu@gmail.com / smenterpriseslu@gmail.com

# கும்பகோணத்தில் குதூகல முப்பெரும் விழா

28-3-2010 அன்று கும்பகோணத்தில் ஸ்ரீ காஞ்சி சங்கரா திருமண மகாலில் யாதவா சோஷியல் அசோசியேஷன், சென்னை, குடந்தை யாதவ மகாசபை மற்றும் யாதவ இளைஞர் பேரவை இணைந்து யாதவர் முப்பெரும் விழாவாக, "யாதவர் கல்யாண மாலை" "யாதவர் வர்த்தக பொருட்காட்சி" மற்றும் "உயர்கல்வி விழிப்புணர்வு முகாம்" ஆகியவை நடத்தியது. ஏராளமான யாதவ பெருமக்கள் இதில் கலந்து கொண்டனர். காலை முதல் மாலை வரை வர்த்தக பொருட்காட்சியும் காலையில் யாதவர் கல்யாண மாலை நிகழ்ச்சியும், மாலையில் உயர்கல்வி பற்றிய கருத்துரையாடலும் நடைபெற்றது.

தலைவர் வி. யுவராஜ் அவர்கள் பேசுகையில் இத்தகைய சிறப்பான முப்பெரும் விழாவினை கும்பகோணத்தில் நடத்த ஒரு வாய்ப்பு கிடைத்ததற்கு நன்றி கூறினார். காலையில் நடைபெற்ற யாதவர் கல்யாண மாலை நிகழ்ச்சியில் இந்தியன் வங்கி இயக்குநர் திரு. G. சரத்சந்திரன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

மாலையில் உயர்கல்வி விழிப்புணர்வு முகாமில் பல்வன் கல்வி அறக்கட்டளை தலைவர் திரு. B. போஸ் அவர்கள் கல்வியின் சிறப்பு பற்றியும், உயர்கல்வி கற்க வழிமுறைகள் பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார். தொழிலதிபர் திரு. சின்னையன் மற்றும் திருமதி.சந்திரா முருகப்பன் விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். மற்றும் திரு. மோகன், திரு. ராதாகிருஷ்ணன், திரு. சுகுமார், திரு. ரகுபதி, திரு. அயன்ராஜ், திரு. பிரபாகரன், திரு. ஷண்முகம், திரு. சாஸ்தா கிருஷ்ணசாமி, திரு. சுப்பிரமணியன், திரு. அழகப்பன் ஆகியோர் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.

விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது. விழாவில் பங்கேற்றவர்கள், யாதவ மக்களுக்கு இத்தகைய அரிய பயனுள்ளள சேவைகளை செய்து வரும் யாதவா சோஷியல் அசோசியேஷன் தலைவர் திரு. வி. யுவராஜ் அவர்களையும் மற்றும் சங்கத்தின் உறுப்பினர்களையும் மனதார பாராட்டினர்.

## திருமண வாழ்த்து

சென்னை, பழவந்தாங்காலைச் சேர்ந்த நம் சங்க உறுப்பினர் திரு. இரா. ஜகந்நாதன் - திருமதி. ஜ. பத்மாவதி இணையரின் மகள் திருநிறைசெல்வி. ஜ. மைதிலி என்கிற நங்கைக்கும் கிழக்கு தாம்பரம், திரு. மா.சின்னகண்ணு - திருமதி. சி. வசந்தா இணையரின் மகன் திருநிறைசெல்வன். சி. கண்ணன் என்கிற நம்பிக்கும் 24-5-2010 அன்று சென்னை திருவல்லிக்கேணியில் திருமணம் நடைபெற்றது. மணவிழாவில், யாதவா சோஷியல் அசோசியேஷன் தலைவர் திரு. வி. யுவராஜ் அவர்கள் மற்றும் தமிழ் நாடு யாதவ மகாசபையின் தலைவர் திரு. ம. கோபாலகிருஷ்ணன் அவர்கள், யாதவா சோஷியல் அசோசியேஷன் உறுப்பினர்கள் திருவாளர்கள் என். நந்தகுமார், செ. மு. கோபாலகிருஷ்ணன், செ.ரா. ஸ்ரீனிவாசன், செ. ரா. சம்பத் குமார், எஸ். வினோத்குமார் ஆகியோர் கலந்து கொண்டு, மணமக்களை வாழ்த்தினர். மணமக்கள் பெறற்கரிய பேறுகள் யாவும் பெற்று வாழ்வாங்கு வாழ யாதவர் பாசறையும் வாழ்த்துகிறது.

# "யாதவர் பாசறை"

மாத இதழ் மூலம் யாதவ சமுதாயம் விழிப்புணர்வு பெற்று வாழ்வில்
வெற்றி பெற எங்களது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

## ASOK STEELS

106/14, கே.எச். ரோடு,
கொருக்குப்பேட்டை, சென்னை - 21.
செல் : 9994333283

## AGD TRADERS

109 A, ஜி.எஸ்.டி. ரோடு,
மேலவலம்பேட்டை, கருங்குழி - 603 303
செல் : 9994332283

## AGD STEELS

200/A, யாதவர் தெரு, வல்லம் ஸ்கூல் அருகில்,
செங்கல்பட்டு
செல் : 9994334283

எங்களிடம் கட்டிடங்களுக்கு தேவையான
**கம்பி, சிமெண்ட், செங்கல், மணல், ஜல்லி** குறைந்த விலையில் கிடைக்கும்



*With Best Compliments from :*

**G.THIRUVENGADAM YADAV,** M.A.,B.L.,

# SRI LAKSHMI ROAD LINES

**FLEET OWNERS AND TRANSPORT CONTRACTORS**
***MILK*GLUCOSE*ETHOLEIN OXIDE*P.OXIDE**

**Plot No. M.C.I., Block No.3 (Opp.4/1)**
**Mogappair East, Chennai – 600037**
**Phone :26561889 Fax: 26562230**
**Mob: 9385558598**
**Email: srilakshmiroadlines@hotmail.com**

# 108 வைணவத் திருத்தலங்கள்

## சோழநாட்டுத் திருப்பதிகள்

### 1. ஸ்ரீ ரங்கம்

திருச்சிராப்பள்ளிக்கு வடக்கே ஐந்து கிலோ மீட்டர் தூரத்தில், காவிரிக் கரையோரத்தில் பூலோக வைகுண்டம் என்று அழைக்கப்படும் ஸ்ரீரங்கம் கோயில் உள்ளது. இக்கோவில் 3072 அடி நீளம் 2520 அடி அகலம் கொண்டு, ஏழு பிரகாரங்களையும், 21 கோபுரங்களையும் கொண்டது. தெற்கு இராஜகோபுரம் 236 அடி கொண்டது. கோயிலின் கருவறை 240 அடி நீளம், 180 அடி அகலம் கொண்டது.

மூலவர் ஸ்ரீரங்கநாதப் பெருமாள் புஜங்க சயனத்தில் தெற்கு நோக்கி ஆதிசேஷன் மீது பள்ளி கொண்டு காட்சியளிக்கிறார். உற்சவர் நம்பெருமாள், தாயார் ஸ்ரீ ரங்க நாச்சியார், தீர்த்தம் சந்திர புஷ்கரணி காவிரி கொள்ளிடம், கோயிலின் விமானம் ப்ரணவாக்ருதி, தல விருட்சம் புன்னை மரம்.

சூரிய குலத்தைச் சேர்ந்த மனுகுமாரன் இஷ்வாகு. இவன் பிரம்மனை நோக்கித் தவம் புரிந்து திருமாலின் திருவாராதன விக்ரகத்தை கேட்டு வாங்கி அயோத்தியில் வைத்து வழிபட்டு வந்தான். இந்த விக்ரகத்தை ஸ்ரீராமபிரானும் வழிப்பட்டார்.

ஸ்ரீராமன், இராவணனனை வென்று சீதாபிராட்டியை மீட்டு அயோத்திக்கு வந்த பொழுது தம் முன்னோர்கள் வழிபட்டு வந்த திருமாலின் திருவாராதன விக்ரகத்தை, அன்புக் காணிக்கையாக விபீஷணனுக்கு வழங்கினார். விபீஷணன் அதை எடுத்து இலங்கைக்குக் கொண்டு செல்லும் பொழுது, காவிரி, கொள்ளிடை நதிக்கரையில் வைத்து இளைப்பாறினார். மீண்டும் அந்த விக்ரகத்தை எடுக்க முயன்றபொழுது அதை எடுக்க முடியவில்லை. “தான் இனிமேல் இங்குதான் நிரந்தரமாக அங்கேயே இருக்கப் போவதாக” பெருமாளே விபீஷணனிடம் கூறியதால் விபீஷணனும் மனமுவந்து அந்த விக்ரகப் பெருமாளை வணங்கி விட்டுவிட்டு இலங்கைக்குச் சென்றான். பெருமாளும் விபீஷணனுக்கு அருளும் வகையில் இலங்கையை நோக்கித் தன் பார்வை வரும்படி சயனித்துக் கொண்டார்.

சோழநாட்டு அரசனான தர்மவர்மன் பெருமாளுக்கு முதலில் சிறு கோயிலைக் கட்டினான். இதற்குப் பிறகு சேர, பாண்டிய அரசர்களும் இக்கோயிலைக் கட்டி முடிக்க அரும்பாடுபட்டனர். அது நாளடைவில் மிகப்பெரிய கோயிலாக உருவெடுத்தது. இன்றைக்கு வைஷ்ணவத் தலங்களில் முதலாவது கோயிலாக, புகழ்பெற்ற நூற்றியெட்டு வைஷ்ணவ தலங்களில் முன்னிலையில் நிற்கிறது.

பெரியாழ்வார், ஆண்டாள், குலசேகர ஆழ்வார், திருமழிசை ஆழ்வார், தொண்டரடிப்பொடி, திருப்பாணாழ்வார், திருமங்கை, பேயாழ்வார், பூதத்தாழ்வார், நம்மாழ்வார் ஆகியோரால் மங்களாசாசனம் செய்யப்பட்ட ஸ்தலம். கம்பனது இராமாயணம் அரங்கேற்றியதும் இங்கேதான்.

ஸ்ரீராமாநுஜர் இறுதியில் திருநாடு அடைந்தாலும் அவரது திருமேனியை வசந்த மண்டபத்தில் - கெடாதவாறு மூலிகைச் சாந்து பூசி - இன்றுவரை வைத்திருக்கிறார்கள்.

**பரிகாரம் :**

இத்தலத்திலுள்ள மூலவரை - வெள்ளி அதிகாலை விஸ்வரூப தரிசனம் கண்டு வந்தால்

திருமணமாகாதவர்களுக்கு சுக்கிரதோஷம் விலகி திருமணம் நடக்கும். பணக்கஷ்டம் உள்ளவர்கள் - அந்த சங்கடத்திலிருந்து மீண்டுவிடுவார்கள். வெளிநாடு சென்று முன்னுக்கு வர வேண்டும் என்று துடிப்பவர்கள், வேலை தேடுபவர்கள், சொந்தத் தொழில் செய்ய ஆசைப்படுபவர்கள் அனைவருக்கும் யோகத்தையும் சௌபாக்கியத்தையும் தரக்கூடிய ஸ்தலம் இது என்பது மிகப்பெரிய சிறப்பு.

## 2. திருக்கோழி அல்லது திருஉறையூர்

சோழநாட்டு திருப்பதிகளில் இரண்டாவது இடத்தைப் பெறுகிறது திருக்கோழியிலுள்ள அழகிய மணவாளப் பெருமாள் கோயில். திருச்சி மாநகருக்கு அருகிலேயே சுமார் மூன்று கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. நகரின் அருகே இருக்கும் இந்தத் திருக்கோயில் மிகவும் பழமையானது. பார்க்கக் கொடுத்து வைக்க வேண்டிய புண்ணிய ஸ்தலம்.

கோயிலின் மூலவர் அழகிய மணவாளப் பெருமாள். பெயருக்கேற்றபடியே கண்ணுக்கும் மனதிற்கும் இனியவராகவே காட்சித் தருகிறார். நின்று சேவை சாதிக்கும் திருக்கோலம். சக்ரத்தை ப்ரயோகிக்கும் நிலையில் இருக்கின்ற கோலம். வடக்கே திருமுகமண்டலம். தாயார் கமலவல்லி நாச்சியார். மற்றொரு பெயர் உறையூர் வல்லி என்பதாகும். இந்த கோயிலில் தாயாருக்கென்று தனி சந்நிதி எதுவும் இல்லை. சதாசர்வகாலம் அருள் பொங்கும் புன்னகைத் திருக்கோலத்தில் காட்சி அளிப்பதால் - மனதிற்கு மிக ரம்மியமான தரிசனம்.

கல்யாணத் தீர்த்தம், சூரிய புஷ்கரணி, குடமுருட்டி நதி - இந்தக் கோயிலின் தீர்த்தமாகும். தேவர்களுக்கெல்லாம் அருள்பாலிக்கும் திருத்தலம் என்ற பெருமையும் உண்டு. கோயிலின் விமானம் கல்யாண விமானம்.

சோழ மன்னரின் திருமகளான கமலவல்லிக்கு - பெருமாள் மீது தீராத காதல். மணந்தால் பெருமாளைத் தான் மணப்பேன் என்று கடுமையான விரதம் பூண்டாள். எவ்வளவோபேர் தடுத்தும் கேட்காமல் விரதம் எல்லை மீறித் தாண்டிப் போக இனியும் கமலவல்லியை சோதிக்கக் கூடாது என்று அழகிய மணவாளப் பெருமாள், மனமிறங்கி கமலவல்லியைத் திருமணம் செய்து கொண்டதாக வரலாறு. திருமணத்திற்குப் பின் கமலவல்லி - நாச்சியார் என்று புதுப் பொலிவு பெற்றார்.

திருப்பாணாழ்வார் அவதாரம் செய்த திருத்தலம் என்பதால் - அவருக்கும் இங்கு ஒரு தனி சன்னதி இருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் பங்குனி உத்தரத்திற்கு முதல் நாள் ஸ்ரீரங்கத்திலிருந்து ஸ்ரீரங்கநாத உத்ஸவ மூர்த்தி - இந்தக் கோயிலுக்கு எழுந்தருளியிருந்து கல்யாண உற்சவம் கண்டு பக்தர்களை அருள்பாலிப்பது வழக்கம், மிகவும் பழமையும் அபாரமான சக்தியையும் உள்ளடக்கிய இந்த திருஉறையூர் அழகிய மணவாளப் பெருமானுக்கு திருமங்கையாழ்வாரும் குலசேகர ஆழ்வாரும் மங்களாசாசனம் செய்திருக்கிறார்கள்.

**பரிகாரம் :**

முற்பிறவியின் தோஷம் காரணமாக திருமணம் நடக்காமல் தவித்துக் கொண்டிருப்பவர்களுக்கும், திருமணமாகி, சூழ்நிலையால் பிரிந்து வாழ்பவர்களுக்கும், இளம் வயதிலேயே தோல் நோயால் துன்பப்படுகிறவர்களுக்கும் அழகிய குழந்தை, அறிவுள்ள குழந்தை பிறக்க வேண்டும் என்பவர்களுக்கும் அனுக்கிரகம் கிடைக்கும் ஒரே கோயில் இந்த அழகிய மணவாளப் பெருமாள் கோயில்தான். குறிப்பாக புதன் சனியன்று இந்த கோயிலுக்கு வந்து தரிசனம் செய்பவர்களுக்கு அடுத்த பிறவி என்பது இருக்காது என்று நம்பப்படுகிறது.

(தொடரும்)

# கடல் துறை கல்வி

சு. லோகேஷ், B.Sc., (Nautical Science)

ஒருவர் வாழ்வில் முன்னேறுவதற்கு உயர் கல்வி மிகவும் அவசியம். நாம் அடுத்தவர் உதவியை நாடி வாழப்பிறந்தோமா, அல்லது உலகை ஆளப்பிறந்தோமா என்பதை நிர்ணயிப்பது ஒருவர் கற்ற உயர் கல்வியேயாகும். நம்மை உயர்த்திக் கொள்வதற்கு உயர்கல்வியில் பல துறைகள் உள்ளன. அவற்றில் ஒன்று தான் கடல் துறை கல்வி.

**கடல் துறை கல்வி மூன்று வகைப்படும் :**

1. கப்பல் தளம் - Deck Side
2. இயந்திர தளம் - Engine Side
3. உணவு தருவிப்பு தளம் - Catering Side

**கப்பல் தளம் :** ஒருவர் மேற்படிப்பினை முடித்துவிட்டு கப்பல் தள பயிற்சி கேடட் ஆக பணியினை ஆரம்பிக்கலாம். பின்னர் கடல் துறை சார்ந்த தேர்வுகளை எழுதி கேப்டன் பதவி வரை உயரலாம்.

**இயந்திரதளம் :** ஒருவர் மேற்படிப்பினை முடித்து விட்டு கடல் துறை பயிற்சி பொறியாளராக சேர்ந்து படிப்படியாக கடல் துறை சார்ந்த தேர்வுகளை எழுதி தலைமை பொறியாளராக உயரலாம். இது மட்டுமல்லாமல் பணிபுரிந்து கொண்டே பயிற்சி முடிந்தபின் மின்னியல் அதிகாரியாகவும் மேற்படிப்பு முடிந்தவுடன் மின்னியல் பயிற்சியாளராகவும் ஆகலாம்.

**உணவு தருவிப்பு தளம் :** சமையல் செய்ய விருப்பமுள்ளவர்களுக்கு இது பொருந்தும். இதற்கு சில பயிற்சி துறை உள்ளது. இந்த பயிற்சியினை வெற்றிகரமாக முடித்தபிறகு கப்பல் தளத்தில் Mess Boy ஆக பணியாற்றி தகுந்த அனுபவம் பெற்ற பிறகு Chief Cook ஆக உயரலாம்.



**கப்பல் தள படிப்புகள் ;**

1. B.Sc., (Nautical Science) (3 வருடம்)
2. Diploma in Nautical Science (1 வருடம்)

**இயந்திர தள படிப்புகள் :**

1. B.E. - Marine Engineering
2. Graduate Marine Engineering (B.E., Mech, படித்தவர்கள் மட்டும்)
3. Trainee Marine Engineering (DME., DEEE, படித்தவர்கள் மட்டும்)

**உணவு தருவிப்பு தள படிப்பு :**

1. Catering Course

**வேலை வாய்ப்பு**

**படிப்பு**

1. B.Sc., (Nautical Science)
2. Diploma in Nautical Science

| **பதவி** | **மாத வருமானம்** |
|---|---|
| Deck Cadet | ரூ. 18,000/- முதல் ரூ.25,000/- வரை |
| 3rd Officer | ரூ. 1,10,000/- முதல் ரூ.2,20,000/- வரை |
| Chief Officer | ரூ. 2,50,000/- முதல் ரூ.3,50,000/- வரை |
| Captain | ரூ. 3,20,000/- முதல் ரூ.4,80,000/- வரை |

**படிப்பு**

1. B.E., Marine Engineering
2. Graduate Marine Engineering

| **பதவி** | **மாத வருமானம்** |
|---|---|
| Engine Cadet | ரூ. 18,000/- முதல் ரூ.25,000/- வரை |
| 4th Engineer | ரூ. 1,10,000/- முதல் ரூ.2,20,000/- வரை |
| 2nd Engineer | ரூ. 2,50,000/- முதல் ரூ.3,50,000/- வரை |
| Chief Engineer | ரூ. 3,20,000/- முதல் ரூ.4,80,000/- வரை |

**படிப்பு**

Catering Course

| **பதவி** | **மாத வருமானம்** |
|---|---|
| Mess Boy | ரூ. 8,000/- முதல் ரூ.20,000/- வரை |
| General Steward | ரூ. 10,000/- முதல் ரூ.25,000/- வரை |
| Cook | ரூ. 15,000/- முதல் ரூ.40,000/- வரை |
| Chief Cook | ரூ. 20,000/- முதல் ரூ.50,000/- வரை |

**கல்வி நிறுவனங்கள் :**

- Indian Maritime University (IMU)
- AMET University
- Vels Academy of Maritime Studies
- SAMS
- Maritime Foundation
- Coimbatore Marine College
- International Maritime Academy



**கடல் துறை கல்வியில் சேர கல்வி தகுதிகள் :**

B.Sc., (N.S) 60% in PCM, 50% in English in 10 +2

DNS., 55 % in PCM, 50% in English in 10 + 2

B.E., (M.E.) 60% in PCM, 50% in English in 10 + 2

GME & TME 50 % Marks in Final Year, 50% Marks in English

**MEDICAL FITNESS**

Deck - 6/6 in each eye No Colour Blindness

Engine : $\pm$ 2.5 in each eye No Colour Blindness

Age Limit - 17.5 years to 25 Years at the Commencement of Course

# தமிழ்நாடு அரசு நலத்திட்டங்கள்

## சமூக நலம்

## மூவலூர் ராம அமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவி திட்டம்.

| | | | |
|---|---|---|---|
| 1. | திட்டத்தின் பெயர் | : | மூவலூர் ராம அமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவி திட்டம் |
| 2. | திட்டத்தின் குறிக்கோள் | : | ஏழை தம்பதியரின் மகளுக்கான திருமண உதவி மற்றும் ஏழை பெண்களின் கல்வி தரத்தை உயர்த்துவது |
| 3. | உதவி வழங்குதல் / தருவித்தல் / அளித்தல் | : | ரூ. 20,000 (காசோலை / வரைவோலை) |
| 4. | தகுதி உடையவர்கள் | : | ஏழை குடும்பத்தில் மற்றும் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள பெண்களுக்கு |
| 5. | எப்பொழுது கிடைக்கும் | : | திருமணத்திற்கு முன்பு |
| 6. | அடிப்படை தகுதி : | | |
| | அ) கல்வி தகுதி | : | மணப்பெண் பத்தாவது வரை படித்திருக்க வேண்டும் / மலை ஜாதியினர் ஐந்தாவது வரை |
| | ஆ) வருமான வரம்பு | : | வருடம் ரூ.12,000 க்கு மேற்படாமல் |
| | இ) வயது வரம்பு | : | மணப்பெண் 18 வயது நிரம்பி இருக்க வேண்டும். |
| | ஈ) இதர தகுதிகள் | : | குடும்பத்தில் ஒரு பெண்ணுக்கு மட்டுமே தகுதி உண்டு |
| | உ) விண்ணப்பம் அனுப்ப வேண்டிய காலக் கெடு | : | திருமண தேதிக்கு 45 நாட்களுக்கு முன். இருப்பினும் திருமண தேதிக்கு ஒரு நாள் முன்னதாக கொடுக்கப்படும் விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்படும். |
| 7. | அணுக வேண்டிய அலுவலர் | : | 1. ஆணையர் (சென்னை, மதுரை, திருச்சி, சேலம், கோயம்புத்தூர், திருநெல்வேலி, ஈரோடு மற்றும் திருப்பூர் மாநகராட்சி)<br>2. நகராட்சி ஆணையர்<br>3. பஞ்சாயத்து யூனியன் ஆணையர்<br>4. மாவட்ட சமூக நல அலுவலர்<br>5. விரிவு அலுவலர் (சமூக நலம்) கிராம நல அலுவலர் |
| 8. | விண்ணப்பங்களை பரிசீலனை செய்ய காலக் கெடு | : | விண்ணப்பம் கிடைத்த 15 நாட்களில் |
| 9. | குறைகள் தெரிவிக்க அணுக வேண்டியவர் | : | மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியர் / மாவட்ட சமூக நல அலுவலர், மாநில அளவில், சமூக நல இயக்குநர், சென்னை - 5. தொலைபேசி : 28545728 |

(திட்டங்கள் தொரும்)




**HOTEL CHITRRA PARK**

367, Travelers Bangalow Road,
Tiruchendur - 628 215
Tamilnadu, INDIA.
Tel : +91 4639 243766 / 243866
Fax : +91 04639 245983
Cell : + 91 9486380900 / 9965472812
hotelchitrapark@yahoo.com
contact@hotelchitrapark.in



MARUTI SUZUKI
Way of Life!

**"யாதவர் பாசறை"**
மாத இதழுக்கு
எங்களது உளங்கனிந்த நல்வாழ்த்துக்கள்..
**P. கார்மேகமணி**



**சோலமலை மாருதி**
(A Division of Solamalai Automobiles Pvt. Ltd.,)
28/5 B, மேலூர் ரோடு,
உத்தங்குடி, மதுரை.
Ph: 0452-4289999
Round the Clock 24 Hrs.
M.O.S. Available
OPEN 7 DAYS
ISO9001 CERTIFIED

# வருமான வரிச் சட்டம் – ஓர் அறிமுகம்

**சுடலை முத்து,** F.C.A.,
Chartered Accountant
புளியங்குடி.

அன்பார்ந்த உறவினர்களே,

வணக்கம், இந்தப் பகுதியின் மூலமாக உங்களை சந்திப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். இந்த பகுதியின் மூலம் நம் நாட்டின் வரிச் சட்டங்கள், குறிப்பாக வருமான வரிச் சட்டம் பற்றியும், அதில் உள்ள நடைமுறைகள் பற்றியும் தெரிந்துகொள்வோம். பொதுவாக நமது சமூக மக்கள் பெரும்பான்மையினர் விவசாயம் மற்றும் அதைச் சார்ந்த தொழில்களான கால் நடை வளர்ப்பு, பால் வியாபாரம், உற்பத்தி சார்ந்த தொழில்கள், வணிகம் ஆகிய தொழில் துறையில் சமீப காலமாக நமது சமூகத்தினர் ஈடுபட்டு வளர்ந்து வருகின்றனர். இந்த விஷயத்தில் நாம் இன்னும் மிகவும் பின் தங்கிய நிலையிலேயே உள்ளோம்.

நாமும் நடைமுறையில் உள்ள சட்டங்கள் பற்றியும், குறிப்பாக வரிச் சட்டங்கள் பற்றிய நமது அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். இன்றைய சமூக அமைப்புக்கு தக்கவாறு நாமும் நமது சமூகமும் மாற்றங்கள் செய்யவேண்டியது காலத்தின் அவசியமாக உள்ளது. இந்த நிலையில் வருமான வரி சட்டம் பற்றி நாம் தெரிந்து கொள்வோம்.

**1. வருமானவரி சட்டம் என்றால் என்ன ? இது எந்த வருடம் இயற்றப்பட்டது ? இதன் செயல்பாடுகள் என்ன ?**

எந்த ஒரு நாட்டின் குடி மக்களுக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும், உள் கட்டமைப்பு வசதிகளையும் செய்து தரவேண்டியது அந்தந்த அரசாங்கத்தின் கடமையாகும். அவ்வாறு நாட்டின் வளர்ச்சிக்கும் அடிப்படை வசதிகளை நிறைவேற்றவும் அரசுக்கு நிறைய பணம் தேவைப்படும். அவைகளை ஈடு செய்யும் பொருட்டு அரசு வரிவசூலில் ஈடுபடும். அவ்வாறு அரசே நேரடியாக பொது மக்களிடமிருந்து வசூல் செய்யும் வரியானது ஒவ்வொருவரின் வருமானத்தைப் பொறுத்து அமைகிறது. இதைத்தான் வருமான வரி என்று கூறுகிறோம். இது ஒரு நேரடி வரி ஆகும்.

வருமான வரிச் சட்டமானது 1961 வருடம் இயற்றப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் பட்ஜெட் தாக்கல் செய்யப்படும்போது இந்த சட்டத்தில் தேவைப்படும் மாற்றங்களை அரசாங்கம் பாராளுமன்றம் மூலமாக நிறைவேற்றிக்கொள்கிறது. இந்த சட்டமானது. இந்தியா முழுமைக்கும் பொருந்தும். நமது நாட்டில் நேரடி வரி வருவாய் நிர்வாகம் முழுவதும் பலபிரிவுகளின் பிரகாரம் நிர்வாகிக்கப்படுகிறது.

**2. வருமான வரி பான் நம்பர் – நிரந்தர கணக்கு எண் – என்றால் என்ன ?**

வருமான வரி பான் நம்பர் (PAN) என்பது ஒரு அடையாள எண் ஆகும். வருமான

வரி சட்டத்தின் வரி செலுத்துவோர் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக பான் நம்பர் வருமானவரித் துறையின் மூலம் வழங்கப்படும். அதன் பெயருக்கு ஏற்றாற் போல் இது ஒரு நிரந்தர எண்ணாகும். வருமான வரிச் சட்டத்தின் படி வரி செலுத்துபவர்கள், கணக்கு வைத்திருப்பவர்கள் (Assessee) ஒவ்வொருவருக்கும் இந்த நிரந்தர கணக்கு எண் வழங்கப்பட்டு வருகிறது.

**3. நிரந்தர கணக்கு எண் பெறுவதற்குரிய வழிமுறைகள் என்ன ?**

நிரந்தர கணக்கு எண் (PAN) யாருக்குத் தேவைப்படுகிறதோ அவர்கள் அதற்குரிய படிவத்தில் (படிவம் 49A) சரியாக பூர்த்தி செய்து முறையாக விண்ணப்பிக்க வேண்டும்.

**4. விண்ணப்பித்த அனைவருக்கும் PAN நம்பர் வழங்கப்படுமா ?**

முறையான படிவத்தில் சரியாக பூர்த்தி செய்து தேவைப்படும் இணைப்புகளுடன் விண்ணப்பித்த அனைவருக்கும் PAN நம்பர் வழங்கப்படும்.

**5. விண்ணப்பத்துடன் என்னென்ன டாக்குமெண்டகள் இணைக்கப்பட வேண்டும் ?**

அ) விண்ணப்பிப்பவரின் கலர் போட்டோ ஒட்டப்பட வேண்டும்.

ஆ) விண்ணப்பதாரரின் புகைப்படம் ஒட்டிய அடையாள அட்டை மற்றும் அவரது முகவரிக்கு உரிய அத்தாட்சி இவைகளின் நகல்கள் விண்ணப்பத்துடன் இணைக்கப்படவேண்டும். உதாரணமாக டிரைவிங் லைசன்ஸ், வாக்காளர் அடையாள அட்டை, குடும்ப அட்டை, பாஸ்போர்ட், பாங்க் பாஸ் புக் ஆகிய ஏதாவது ஒன்றின் நகல் இணைத்தால் போதுமானது.

**6. பான் வாங்குவதற்கு விண்ணப்ப கட்டணம் ஏதும் உண்டா ? அதை எவ்வாறு செலுத்த வேண்டும் ?**

பான்கார்டு விண்ணப்பத்துடன் அதற்குரிய கட்டணம் ரூ.100/- கட்ட வேண்டும். அதை பணமாக கட்டினால் போதும்.

வருமான வரி பற்றிய சந்தேகங்களை கீழ்க்காணும் முகவரிக்கு எழுதினால் விளக்கங்கள் அளிக்கப்படும்

**வி. யுவராஜ்,** ஆசிரியர், யாதவர் பாசறை
7, பார்த்தசாரதி சுவாமி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.

(தொடரும்)



★ துணி துவைக்கும் போது சோப்புடன் ஒரு பாக்கெட் ஷாம்பூவும் சேர்த்து விட்டால், துணி வியர்வை நாற்றம் மறைந்து மணமாக இருக்கும். பட்டு, சில்க் காட்டன் போன்ற துணிகளை ஷாம்பூவால் துவைத்தால் பளபளப்பு மங்காது.



★ தரை துடைக்கும் போது கொஞ்சம் ஷாம்பூவையும் தண்ணீரில் கலந்து துடைத்தால் வீடு கமகமக்கும். பிசுபிசுக்கான விளக்குகள், நகைகள், வெள்ளி பாத்திரங்கள் போன்ற பொருட்களை கழுவும் போது ஷாம்பூ சேர்த்தால் பிசுபிசுக்கு நீங்கி புத்தம் புதிதாகி விடும்.

# RANIPPETTAI ENGINEERING COLLEGE
# RANIPPETTAI POLYTECHNIC COLLEGE
# RANIPPETTAI TEACHER TRAINING INSTITUTE

Thenkadappanthangal - 632513.
Walaja Taluk, Vellore Dist - Tamilnadu
Approved by - AICTE - New Delhi, Anna University - Chennai,
N.C.T.E. - Bangalore and Government of Tamilnadu

| ENGINEERING : | POLYTECHNIC : |
|---|---|
| ● Electronics & Communications Engg | ● Electronics & Communication Engg. |
| ● Electrical & Electronics Engg | ● Electrical & Electronics Engg |
| ● Mechanical Engineering | ● Mechanical Engineering |
| ● Computer Science & Engg | ● Computer Science & Engg |
| ● Information Technology | ● Civil Engineering |

| Eligibility : | |
|---|---|
| **M.E.** - Communications Systems | ● B.E. Pass in ECE / Electronics |
| **MBA** | ● Pass in any U.G. Degree<br>⋆ OC - 55% BC - 50%<br>⋆ MBC - 45% SC : + 2 Pass |
| **ENGINEERING** | ● Lateral Entry - Diploma, B.Sc. |
| **POLYTECHNIC** | ● 10th Pass Lateral Entry + 2 Pass |
| **TEACHER TRAINING** | ⋆ OC/BC/MBC - 45% SC/ST + 2 Pass |

**PLACEMENT AND TRAINING OFFICE**

- Arranging campus interviews through companies like Wipro, TCS, CTS, Infosys, HCL, Caritor, Caterpillar (I) Ltd, Sathyam Computers etc.
- Co-Curriculum programs like BEC Course, Personality development Communication Skills are organised
- Character building through Regular Class on Yoga, Meditation & Moral Science

**SALIENT FEATURES**

- Individual students care through facultyand class advisors
- State of art technology of Computer Lab
- Computerized Modern Library
- Availability of College Transport to nearby areas in the district
- Excellent Academic Performance
- Coaching by well qualified and Experienced Faculty.

**LOCATION :**

College is situated at Bangalore - Chennai National Highway NH4 (Near Chennasamudhram Tollgate) about 100 Kms from Chennai / 45 Kms from Chittoor / 30 kms from Vellore / 10 Kms from Arcot / 3 Kms from Walajapet
Contact : Ph : 04172 - 232888, 230959, 230168, Tele/fax : 04172 / 231059 / E-mail : recwalaja@yahoo.com

## CAMEL

| | | |
|---|---|---|
| Habitat | : | Steppe, desert mountain, grassland |
| Diet | : | Grasses, shrubs, salty plants |
| Size | : | Head body 2 ms. |
| Breeding | : | 1 young after pregnancy of 330-410 days. |
| Colour | : | Brownish (dark or pale) |

**Q. For how long can a camel live without water ?**

A. *Camels are very important animals to the people of desert as they are able to survive in the harsh deserts. The Camels have been known to go without water for up to ten months. Once they find water they can drink upto one hundred and forty litres in a short time without any ill effects. They provide the chief means of transportation and are an important source of food and clothing. There are six species in the camel family. They feed on a variety of plants and eat thorn bushes, dry vegetation and even salt bushes. The size of the smallest camel is 1.2 metres from head to tail with a shoulder height of 0.91 metres and weigh 45 kgs, the largest, the Bactrian camel is three metres and weighs 450 kgs. The female produces one baby after eleven months of pregnancy.*

## Why was the Statue of Liberty built ?

*The Statue of Liberty was built to celebrate the birth of-the United States of America and to commemorate the friendship of the people of USA and the republic of France. This Statue stands on Bedloe's Island now called Liberty Island at the mouth of New York harbour. This was put here as desired by sculptor Frederic Bartholdi.*

*The plan for this monument was made by the famous French historian Edouard de Laboulaye after the American civil war. The cost of the statue was met by the French people, while the money for the 150 ft pedestal was raised in the United States. The statue was built in France under the supervision and guidance of sculptor Frederic Auguste Bartholdi. It was made of copper sheets. In 1885, the complete statue,152 ft high and weighing 225 tons was shipped to New York City. It was put on the pedestal at Bedloe's Island. It was mounted on its pedestal and dedicated by President Grover Cleveland on Oct. 28, 1886.*

*The total height of this monument from foundation upto the torch is 305 feet. It represents a woman holding a torch in her raised right hand and a tablet bearing the date July 4, 1776 in her left. An elevator rises to the balcony level, and a spiral staircase leads to an observation platform in the figure's crown.*

*The statue was at first administered by the Light house Board, because the illuminated torch was considered a navigational aid. In 1901 the statue was transferred to the War Department. In 1924, it was declared a National monument. In 1956 Bedloe's Island was renamed as Liberty Island.*

*Certainly this colossal statue is a symbol of freedom and equality.*

*Courtesy : Tell me why ?*

# IDIOMS

An idiom is an expression, word or phrase that has a figurative meaning that is comprehended in regard to a common use of that expression that is separate from the literal meaning or definition of the words of which it is made. We would be giving few idioms, its meaning and its use in a sentence, every month. This would be useful for the students as well as employed youth.

***A blast***

- A great time, a lot of fun

The students were having a blast until the teacher walked in.

***Ask for the moon***

- To ask for too much

The woman asks for the moon, but is never able to get what she wants

***Be all ears***

- To listen eagerly and carefully

The boy was all ears when the teacher described the circus

***Birds –eye view***

- A view from high above, a brief look at something

We had a birds –eye view of the playing field from our seats high up in the stadium.

***Bone of contention***

- A reason for quarrels, the subject of a fight

The family cottage was a major bone of contention after the father died.

***Build castles in the air***

- To make plans that are impossible

The girl is always building castles in the air and none of them have any chance to succeed.

***By word of mouth***

- By speaking rather than writing

We learned about the party by word of mouth.

***Carry a lot of weight with [someone or some thing]***

- To be very influential with some one or a group of people

The man's education and experience carry a lot of weight in the university.

***Cheat on [ some one ]***

- To be unfaithful to some one

The man began cheating on his wife which was the cause of their divorce.

***Came a cropper***

- To fail

The man came a cropper in the chess tournament and that is why he is sad.

***Crack pot***

- An eccentric person with ideas that do not make sense to others

The man is a crack pot and you never know what he will do next.

***Cut out for [something]***

- To have a talent for something, to be suited for something

I do not think that I am cut out for all of the travelling that is required for this job.

***Deep water***

- Serious trouble or difficulty

The boy will be in deep water if he does not tell us where he spent the money.

***Dog in the manger***

- Some one who prevents others from doing what he does not want them to do [from Aesops Fables]

The girl was a dog in the manger when she cancelled the dinner because she could not attend.

***Draw fire***

- To receive criticism for something

The government began to draw fire when they announced changes in the health care systems.

**THE TIRUVATEESWARAR HINDU JANOPAKARA NIDHI LTD**

SINCE 1909

**ACCEPTS FIXED DEPOSITS**
**SANCTIONS LOAN AGAINST SECURITY OF JEWELS,**
**LAND & BUILDING WITHIN AND ADJOINING CHENNAI CITY**
**AND ALSO ON ITS OWN DEPOSITS**

New No.50, Old No.36, Kuppumuthu Street, Tiruvateeswaranpet,
Chennai – 600 005. Ph: 044-28414520

சமையல் குறிப்புகள்

# பெஸரட்



## தேவையான பொருட்கள்

| | | | |
|---|---|---|---|
| பாசிப்பயிறு | - 100 கிராம் | கொண்டைகடலை | - 20 கிராம் |
| இஞ்சி | - சிறிய துண்டு | பச்சைமிளகாய் | - 1 |
| சின்ன வெங்காயம் | - 50 கிராம் | புதினா | - சிறிதளவு |
| கோஸ் | - 50 கிராம் (துருவியது) | உப்பு | - தேவையான அளவு |

### செய் முறை

1. பாசிப்பயிறு மற்றும் கொண்டைக் கடலையை தனித்தனியே நன்கு ஊறவைக்கவும்
2. பாசிப்பயிறு, கொண்டை கடலை, இஞ்சி, பச்சை மிளகாய், புதினா ஆகியவற்றை உப்பு சேர்த்து மிக்ஸியில் சிறிதளவு தண்ணீர் சேர்த்து நைசாக அரைத்துக் கொள்ளவும்.
3. இவை நன்கு மசிந்ததும் சின்ன வெங்காயத்தையும் சேர்த்து அரைக்கவும்
4. அரைத்த மாவுடன் துருவிய கோஸ் சேர்த்து நன்கு கலந்து கொள்ளவும்.
5. தோசை கல்லை நன்கு சூடாக்கி கோஸ் கலந்த மாவை கரண்டியால் எடுத்து தோசை போல ஊற்றி வேகவிடவும். தோசையில் எண்ணெய் ஊற்றத் தேவையில்லை.
6. தோசை இருபுறமும் வேகும் வரை திருப்பி போட்டு எடுத்து பரிமாறவும்



# மிக்ஸட் வெஜிடபிள் ஆம்லெட்



## தேவையான பொருட்கள் :

| | | | |
|---|---|---|---|
| முட்டை | - 3 (வெள்ளைக் கரு மட்டும்) | பொட்டுக்கடலை மாவு | - 2 டேபிள் ஸ்பூன் |
| இஞ்சி பூண்டு விழுது | - 1/2 ஸ்பூன் | வெங்காய் விழுது | - 1 ஸ்பூன் |
| குடை மிளகாய் | - 1 | கொத்தமல்லி | - தே. அளவு |
| தக்காளி | - 1 | நறுக்கிய வெங்கயாம் | - சிறிதளவு |
| சக்தி மசாலா மிளகாய் தூள் | - 1/2 ஸ்பூன் | மிளகு தூள் | - 1 சிட்டிகை |
| மஞ்சள் | - 1 சிட்டிகை | உப்பு தேவையான அளவு | |

### செய்முறை

1. குடைமிளகாயையும், தக்காளியையும், வட்டவட்டமாக நறுக்கிக் கொள்ளவும்
2. முட்டையை நன்கு நுரை வரும் அளவு அடித்துக் கொள்ளவும்
3. அடித்த முட்டையுடன் பொட்டுக்கடலை மாவு, இஞ்சி, பூண்டு விழுது, வெங்காய விழுது, மஞ்சள் தூள், மிளகாய் தூள், உப்பு சேர்த்து நன்கு கலந்து கொள்ளவும்.
4. தேசை கல்லை சூடாக்கி அதில் முட்டை கலவையை ஊற்றவும்
5. முட்டையின் மேல் நறுக்கிய வெங்காயத்தை தூவி, தக்காளி, குடை மிளகாய் துண்டுகளை வைத்துவிடவும்.
6. கொத்தமல்லி தழைகள் தூவி, உப்பு, மிளகுத் தூள் தூவி, ஆம்லெட்டை மூடி வேகவிட்டு எடுத்து பரிமாறவும்.

# திருமண மாலை

## மணமகள்

சுபாஷினி, 12-07-1980, புனர்பூசம், B.E., M.S., வெளிநாடு, 3 லட்சம், தந்தையார் பெயர் : பரசுராமன், தொழில் : பணி நிறைவு, தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி : 23, கம்பர் தெரு, மேதா நகர், சென்னை - 94, தொலைபேசி : 044-23743204

லதா, 15-5-1983, திருவாதிரை, M.Phil., தந்தையார் பெயர் : நடராஜன், தொழில் : காவல் துறை ஆய்வாளர் (ஓய்வு), தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி : 3/1, சையத் அஹமது உசேன் தெரு, மயிலாப்பூர், சென்னை - 4. தொலைபேசி : 9940223710

ஆர்த்தி, 01-08-1986, மிருகஷீரிஷம், B.E., M.S. தந்தையார் பெயர் : செல்வமணி, தொழில் : வணிகம், தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி : 49, 9வது தெரு, Y-பிளாக், அண்ணா நகர், சென்னை - 40, தொலைபேசி : 9444681869 / 26268333

பவித்ரா, 03-06-1979, உத்திரம்-1, M.A., தந்தையார் பெயர் : ஷண்முகம், தொழில் : பொது மேளாலர் வீல்ஸ் இந்தியா - பாடி (ஓய்வு), தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி : 4/10, E-டைப், சிட்கோ நகர், வில்லிவாக்கம். சென்னை - 49, தொலைபேசி : 9840388393 / 26171249,

சௌமியா, 01-01-1983, பூசம், B.E., தந்தையார் பெயர் : கிருஷ்ணன், தொழில் : வணிகம், தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி : 10, சோ நகர், கடலூர் போர்ட், கடலூர் - 607003, தொலைபேசி : 9944356909/04142-238218

சரண்யா, 13-11-1984, திருவாதிரை, B.E., T.C.S., தந்தையார் பெயர் : எத்திராஜன், தொழில் : மருந்து கடை, தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி : 35/1, செல்வ வினாயகர் கோயில் தெரு, நெல்வயல், பெரம்பூர், சென்னை - 11. தொலைபேசி : 9940256174/9840346504.

சாய் நிருபமா, 15-5-1987, மூலம் - 1, B.E., தந்தையார் பெயர் : ராஜ்குமார், தொழில் : வங்கி உதவி மேலாளர் - ஆந்திரா வங்கி, தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: லக்ஷ்மி விலாஸ், F-1, 22/16, திரு.வி.க. 3வது தெரு, ராயப்பேட்டை நெடுஞ்சாலை, சென்னை - 14. தொலைபேசி : 9444578739 / 24988514

ரஞ்சினி, 14-07-1980, ஆயில்யம், B. Pharm., M.B.A., தந்தையார் பெயர் : மாடசாமி, தொழில்: வணிகம், தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி : 4/215-1, சுந்தரம் நகர், முத்தையாபுரம், தூத்துக்குடி - 628005. தொலைபேசி : 9843866444

லதா, 14-4-83, பரணி, B.Com., M.B.A., தந்தையார் பெயர் : ராதாகிருஷ்ணன், தொழில் ; தனியார் - கண்காணிப்பாளர், தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி, பிளாட் நம்பர் : 68, கதவு எண். 10, 24வது தெரு, 2வது விரிவாக்கம், பாலாஜி நகர், புழுதிவாக்கம், சென்னை தொலைபேசி : 22531463

சங்கீதா, 2-7-83, ஆயில்யம், B.E., Infosys, தந்தையார் பெயர் : பிரகாஷ், தொழில் : கிராம அதிகாரி, தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி, பிளாட் நம்பர் : 62, 24வது தெரு, 1வது விரிவாக்கம், பாலாஜி நகர், புழுதிவாக்கம், சென்னை, தொலைபேசி : 22530288

## மணமகன்

பிரபு, 01-07-1982, விசாகம், B.B.A., M.B.A., தனியார், 25000/- தாயார் பெயர் : மங்கயர்க்கரசி, தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி : 19/6, காரணீஸ்வரர் பகோடா தெரு, மயிலாப்பூர், சென்னை - 4. தொலைபேசி : 9840895897 / 24986290

அர்ஜுன் செந்தில், 18-6-1982, B.Tech (IT), அஸ்வினி - 4, தனியார், 50000/-, தந்தையார் பெயர் : தவசயன், தொழில் : லக்ஷ்மி மில் - கோவை (ஓய்வு), தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி : 3/285, மாங்காளியம்மன் கோயில் தெரு, பரங்கிமலை, சென்னை - 16. தொலைபேசி : 9840655604

விக்னேஷ், 22.12.1981, ஸ்வாதி, M.C.A., தனியார், 30000/- தந்தையார் பெயர் : கோவிந்த், தொழில் : ஏர் ப்ரைட் லிமிட் (ஓய்வு), தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி : லக்ஷ்மி விலாஸ், F-1, 22/16, திரு.வி.க. 3வது தெரு, ராயப்பேட்டை நெடுஞ்சாலை, சென்னை - 14. தொலைபேசி : 9444578739 / 24988514

மகேஷ், 03-06-1979, பூசம், ஹோட்டல் பார்க், 7000/- தந்தையார் பெயர் : மோஹன், தொழில், தனியார் - கண்காணிப்பாளர், தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி : 3/285, ஆண்டாள் அவென்யு, மகரந்தபுரம், முகலிவாக்கம், சென்னை - 116. தொலைபேசி : 9383283166 / 996260296

உமாஷங்கர் 13-8-1977, பூசம், B.Tech, M.B.A., விப்ரோ, 55000/-, தந்தையார் பெயர் : கோதண்டன், தொழில் : பைனான்சியர், தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி : 22, வெங்கடாசல செட்டி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 5. தொலைபேசி : 28440036

திவாகர், 14-7-1979, பூரட்டாதி, M.C.A., M.B.A., சாப்ட்வேர், 75000/- தந்தையார் பெயர் : நடராஜன், தொழில், : டீலர், இந்துஸ்தான் பெட்ரோலியம், தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி : பிளாக் நம்பர் : 5, பிளாட் நம்பர் : 2(5/2), முகப்பேர் மேற்கு, சென்னை - 37, தொலைபேசி : 9380533955, 9791045528

பிரபாகரன், 01-01-1978, உத்திரம், M.C.A., சாப்ட்வேர், 80,000/-, தந்தையார் பெயர் : கோபாலகிருஷ்ணன், தொழில் : வணிகம், தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி : 22/55C, பாரதியார் தெரு, செங்கற்பட்டு - 603 001. தொலைபேசி : 27431917 / 9894242023

ராஜாஷங்கர், 14-4-1980, ரேவதி, M.C.A., சாப்ட்வேர், தந்தையார் பெயர் : கருப்பையா தொழில் : சிவில் பொறியாளர், தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி : 10G, சிங்கராயர் காலனி, தெற்கு தெரு, மதுரை - 625 002. தொலைபேசி : 9443225323/0452 - 2532345

ராஜேஷ், 06-08-1982, அவிட்டம், B.E., வெப் இந்தியா, 15,000/-, தந்தையார் பெயர் : ருத்ரமணி, தொழில் : மேளாலர் - கணக்கு, ஃபுட் கார்ப்பரேஷன் (ஓய்வு), தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி : 2/23, 8வது தெரு, ஜெய் நகர், அரும்பாக்கம், சென்னை - 16. தொலைபேசி : 98404 19230

கணேஷ், 02-08-1986, திருவாதிரை, B.E., விப்ரோ, தந்தையார் பெயர் : மணிவண்ணன், தொழில் : சூப்பிரண்டண்டு, கட்டிடக்கலை, (ஓய்வு) சேப்பாக்கம், தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி : AP201, 5, 10 வது தெரு, 2வது செக்டார், கே.கே. நகர், சென்னை - 78, தொலைபேசி : 98404 54588

**விளம்பர கட்டண விபரம் 12 இதழ்களுக்கு**

| | |
|---|---|
| பின் அட்டை (வெளிப்புறம்) | ரூ.25,000 |
| முன் / பின் அட்டை (உட்புறம்) | ரூ.20,000 |
| முழுப்பக்கம் வண்ணம் | ரூ.15,000 |
| அரைப்பக்கம் வண்ணம் | ரூ. 8,000 |
| முழுப்பக்கம் | ரூ.10,000 |
| அரைப்பக்கம் | ரூ. 5,000 |
| கால்பாக்கம் | ரூ. 3,000 |


**யாதவர் பாசறை சந்தா விபரம்**

**ஆயுள் சந்தா ரூ.500.00**

**ஆண்டு சந்தா ரூ.100.00**

காசோலை, டிராப்ட் மூலமாக
"YADAVA SOCIAL ASSOCIATION"
என்ற பெயரில் எடுத்து
அனுப்பவும்

# இலவச மணமாலை



யாதவ பெற்றோர்கள், தங்கள் மகன் / மகள் பற்றிய விவரங்களை, "யாதவர் பாசறை" மாத இதழில் **இலவசமாக வெளியிட உள்ளோம்.**

தங்கள் மகன்/மகள் பெயர், பிறந்த தேதி, கல்வித்தகுதி, நட்சத்திரம், வேலை பற்றிய விவரம், மாத வருமானம், வீட்டு விலாசம், தொ.பே.எண், ஈமெயில் விலாசம், தோஷங்கள் பற்றிய விவரம், தந்தை பெயர், தந்தையின்தொழில் போன்ற விவரங்களை எழுதி அனுப்பவும்.

யாதவர் பாசறை மாத இதழில் விளம்பரம் செய்ய / சந்தா / இலவச மணமாலை விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் :


**வி. யுவராஜ்,**
யாதவர் பாசறை, 7, பார்த்தசாரதி சுவாமி தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை - 600 005. செல் : 9840705887
E-mail : yuvaraj59@gmail.com



Edited and Publised by V. Yuvaraj, No.7, Parthasarathy Swamy Street, Triplicane, Chennai - 600 005. Mobile : 98407 05887,
Typesetting by KSK Laser, No.17, Ponnappa Lane, Triplicane, Chennai - 600 005.
Printed by : S.R. Shobana, Maazaru Print Services, 45, Mosque Street, Triplicane, Chennai - 600 005.